முதலமைச்சர் அவர்களுக்கு, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இயக்கத்தைச் சார்ந்த ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜீவ், உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் திரு. ஸ்ரீராம் மற்றும் திரு. அசோகன் போன்றவர்கள் நேரில் வந்து முதலமைச்சர் அவர்களையும், அந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த எங்கள் ஆருயிர் இளைஞர் அணிச் செயலாளர் அவர்களையும் சந்தித்து, எங்கள் வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், மாநில வளர்ச்சிக் கொள்கை குழுத் துணைத் தலைவர் அவர்களையும் நேரில் சந்தித்து, நன்றி தெரிவிக்க வந்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்தபோது "இனி கேட்க எதுவுமே இல்லை ஐயா எல்லாவற்றையும் செய்து கொடுத்துவிட்டீர்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க முதலமைச்சர் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கை விவசாயத்திற்கு ஒரு மிகப் பெரிய அளவில் ஊக்கத்தை, ஒரு துவக்கத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள், இதை வரலாற்றில் பதிவு செய்துகொள்ளலாம். இனி வருங்காலத்தில் இயற்கை விவசாயத்தைத் தலைநிமிரச் செய்த முதல் முதலமைச்சர், எங்கள் முதல்வர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் நீங்கள்தான் என்று சொல்லும் அளவிற்கு, நிரூபித்துவிட்டீர்கள். இனிமேல் நிச்சயமாக, தமிழகமெங்கும் இளைஞர்கள் இயற்கை விவசாயத்தை நோக்கி படையெடுத்து வருவார்கள், அதற்கு நன்றி, நன்றி, நன்றி என்று தெரிவித்திருக்கிறார்கள்". அதை இந்த அவையில் பதிவு செய்து புரட்சிகரமான புதிய வேளாண் புரட்சியைச் செய்திருக்கும் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

4. அறிவிப்பு

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி 23-8-2021 மற்றும் 24-8-2021 ஆகிய நாட்களிலும், கணினிவழிப் பயிற்சி 25-8-2021 முதல் 27-8-2021 வரையிலும் நடைபெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி வருகின்ற 23–8–2021 (திங்கட்கிழமை), 24–8–2021 (செவ்வாய்க்கிழமை) ஆகிய இரண்டு நாட்களில் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற*

2021 ஆகஸ்டு 19] [பேரவைத் தலைவர்]

முன்னாள் உறுப்பினர்கள் விடுதியில் 10-வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

மேலும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிவழிப் பயிற்சி, 25-8-2021 (புதன்கிழமை) முதல் 27-8-2021 (வெள்ளிக்கிழமை) முடிய தினமும் மாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை, தற்போது சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறும் இந்தக் கூட்டரங்கில் கணினி முன் அந்தப் பயிற்சி நடைபெறும். இப்பயிற்சியில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 23-8-2021 (திங்கட்கிழமை), காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

-ஏதுமில்லை-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS